10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 133 திங்கட்கிழமை ஒக்ரோபர் 02 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## அர்ஜுன் மகேந்திரன் இன்றும் ஆஜர்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாகப் பரீட்சிர்த்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் ஜனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவுக்கு இன்றும் சமுகமளித்துள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் சுமார் 10 நாட்களுக்கு முன்னராக மூன்று தடவைகள் திறைசேரி முறிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகி விளக்கமளித்திருந்தார். இந்த நிலையில் இன்றும் அவருக்கு விளக்கமளிப்பதற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. (எ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியிலேயே நடக்கும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதமே நடைபெறும். அதன் பின்னர், மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தல்களுக்கு ஐக்கியக் தேசியக் கட்சி தற்சமயம் தயாராகி வருவதாகக் குறிப்பிட்ட பிரதமர், இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரித கதியில் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

பொலனறுவை, மின்னேரியா, மெதிரிகிரிய பிரதேசங்களின் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு அங்கத்தவர்களின் கூட்டம் ஹிங்குராக்கொட பிரதேசத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் 2025ஆம் ஆண்டளவில் கடன் சுமை இல்லாத ஸ்திரமான பொருளாதாரத்துடன் கூடிய நாடாக இலங்கை மாற்றியமைக்கப்படுமென்றும் குறிப்பிட்டார். (எ)





# சுயலாப அரசியலுக்கு இடமில்லை

தேவை எனில் தனிவழி செல்வோம்

“தமிழ் மக்கள் மத்தியில் சுயலாப வயிற்றுப்பாட்டு அரசியலுக்கு இனிமேல் இடமில்லை. அதற்கு நாம் இடம் கொடுக்கவும் மாட்டோம்” எனக் குறிப்பிட்டுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதில் உரிய புரிந்துணர்வு இல்லையெனில் நாடெங்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துக்

06



## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

பாணந்துறை மொரடுமுல்ல, சுதர்மாராம வீதியில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், 28 வயதான இளைஞன் பலியாகியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் கடும் காயமடைந்து, அவருடைய வீட்டின் முன்பாக விழுந்து கிடந்த, அந்த நபர், பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில், கல்கடஸ் வகை துப்பாக்கியுடன் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 28 வயதான சந்தேகநபர், திக்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்த மொரட்டுமுல்ல பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (எ)

## மணலாறு வீதியில் இராணுவ வீரரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு - மணலாறு பிரதான வீதிச் சந்தித் தரைப் படை முகாமில் இராணுவவீரர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மேலும், சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

## வித்யா வழக்குத் தீர்ப்பு மைத்திரி புகழாரம்

வித்யா கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இந்த நாட்டின் முக்கியமான தீர்ப்பாகும். இது வரலாற்று ரீதியான தீர்ப்பு, மதிக்கத்தக்க தீர்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன.



இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், பாடசாலையில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றது. ஆனால் வீடுகளில் சிறுவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கின்றதா? என்பது கேள்விக் குறியான விடயமே எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ)



## “வாக்குமூலமளிப்பதற்கு கொழும்புக்கு வர முடியாது”

கொழும்பு பயங்கரவாதத் குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணைக்காகத் தான் கொழும்புக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளதாகவும் மன்னார் வந்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் மன்னார் மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

விசாரணை ஒன்றுக்காகக் கொழும்புக்கு வருமாறு பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த 27 ஆம் திகதி சிவகரனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அது தொடர்பில் சிவகரனால் கொழும்புப் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளருக்கு, நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், “கொழும்புப் பயங்கரவாதக் குற்றத்தடுப்பு

06



## பரந்தன் வீதியில் விபத்து: ஒருவர் படுகாயம்!

புதுக்குடியிருப்பு - பரந்தன் பிரதான வீதியில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு நகரப் பகுதி பிரதான வீதி வழியே மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்து கொண்டிருந்த பிக்கப் வாகனம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்த 25 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும், சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் விலை 65 ஆக நிர்ணயம்



அரசாங்கத்திடம் கைவசம் இருக்கின்ற ஒரு தொகுதி தேங்காய்கள், சந்தைக்கு இன்று விடப்பட்டுள்ளன. இதனூடாகத் தேங்காய் ஒன்றை, 65 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யமுடியும் என்று தெங்கு உற்பத்தி சபை அறிவித்துள்ளது.

சிறு தெங்கு உற்பத்தியாளர்களிட மிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தேங்காய்களே, இவ்வாறு சந்தைக்கு விடப்பட வுள்ளன என்று தெங்கு உற்பத்திச் சபையின் தலைவர் கபில யகந்தாவல தெரிவித்தார்.

“நடமாடும் வண்டிகளைக் கொண்டு, விற்பனை செய்யப்படும் இந்தத் தேங்காய்கள், இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில், வர்ணம் தீட்டப்பட்டுள்ளன” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

“இதேவேளை, சதொச விற்பனை நிலையங்களிலும், குறைந்த விலையில் தேங்காய்களை இன்று முதல் கொள்வனவு செய்து கொள்ளமுடியும்” என்றும் அவர் தெரிவித்தார். (உ)

# சிறுவர் தினம்



ஆத்தியடி முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு இன்று காலை நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி வைத்தார். (உ–11)

# நூற்றாண்டு விழா கிரிக்கெட் போட்டி



கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 6, 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டுப் பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட மென்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வின் பிரதமவிருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி க.சிவன்சுதன் கலந்து கொண்டார். (உ-11)

# வாக்குமூலமளிக்க அக்மீமன தேரர் ஆஜர்

மியன்மார் ரோஹிங்யா அகதிகள், தங்க வைக்கப்பட்டிருந்த கல்கிஸையில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், வாக்கு மூலம் அளிப்பதற்காக, அக்மீமன தயாரத்ன தேரர், கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகியுள்ளார்.

மியன்மார் ரோஹிங்யா அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டின்மீது கடந்த வாரம் பிக்குகள் உள்ளடங்கிய குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

அதனையடுத்து அகதிகள் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டதோடு பூசா முகாம் பகுதிகளில் போராட்டங்கள் நடத்தத் தடையுத்தரவும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# இலவச மருத்துவ முகாம்

தமிழ்த்தாய் மன்றம் எனும் அமைப்பு அமரர் திரு. திருமதி மு.க சின்னையா சௌபாக்கியவதி நினைவாக இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 5, 6, 7ஆம் திகதிகளில் காலை 7 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை “பொற்கமலாதேவி வாசா” இல. 31, புதிய செங்குந்தா வீதி, சட்டநாதர் வீதி ஊடாக திருநெல்வேலி கிழக்கில் நடைபெறவுள்ளது. குறித்த மருத்துவ முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டள்ளது.

முன்கூட்டிய பதிவு உள்ளிட்ட மேலதிக விபரங்களை 0774626278 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (உ)

# காணிச் சண்டையில் நால்வர் காயம்; இருவர் கைது!


திருகோணமலை, ஜயந்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு பிரிவினரிடையே இன்று ஏற்பட்ட காணிச்சண்டை கைகலப்பாக மாறியதில், நால்வர் காயமடைந்துள்ளனரெனவும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனரெனவும், ஜயந்திபுர பொலிஸார் தெரிவித்தனர். ஜயந்திகம மற்றும் சமகிபுர பகுதியைச் சேர்ந்த 44, 37, 54, 60 வயதுடைய நால்வரே, காயமடைந்த நிலையில், கந்தளாய் தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனரென, ஜயந்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

ஜயந்திபுர பிரதேசத்தில் காணிகளை அளவிடுகின்ற போது பொதுக்கல், குறித்த ஓர் இடத்தில் இடப்பட வேண்டும் என்று ஒரு சாராரும் வேறு ஒரு இடத்தில் இடம்பட வேண்டுமென மற்றொரு சாராரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வாய்த்தர்க்கம், இறுதியில் கைகலப்பாக மாறியதில் மேற்படி நால்வர் காயமடைந்தனர்.

இந்நிலையில், ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், காணிச் சண்டையில் முக்கியமாகத் தொடர்புடைய இருவரைக் கைதுசெய்தனர். (உ)

# மக்கள் வங்கி கிளை திறப்பு



மக்கள் வங்கியின் புலோலி சேவை நிலையத் திறப்பு விழா இன்று நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிறியும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்துகொண்டனர். குறித்த மக்கள் வங்கிக் கிளையானது பிரதான வீதி மந்திகையில் அமைக்கப்பட்டுள்ளது. (உ)

# விளையாட்டுப் பயிற்சியில் மாணவன் மரணம்

பல்லேகலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில், றக்பி பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் வழுக்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

கண்டி திரித்துவ கல்லூரியில், 12ஆம் தரத்தில் கல்வி பயிலும், 18 வயதான மாணவனே உயிரிழந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.


பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை மாணவனின் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பல்லேகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (உ)

# நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப்பட்டறை

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின் ஏற்பாட்டில் நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக இந்தப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இருநாள் பயிற்சிப்பட்டறையாக இந்த மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இந்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (உ)



# சிறுவன் துஷ்பிரயோகம் அண்ணனும் அண்ணியும் கைது

12 வயதான சிறுவனை, சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், அந்தச் சிறுவனின் மூத்த சகோதரனும், அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச சிறுவர் தினமான, நேற்றுக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே, இவ்விருவரையும் கைது செய்துள்ளதாகவும், அச்சிறுவனை மீட்டு, வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகவும் கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வோம்





அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வடகொரியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த முயற்சி செய்ய வேண்டாம் எனவும் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் என்றும் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே நிலவி வரும் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க பல கட்ட முயற்சிகளை மேற்கொண்டும் அவை தோல்வியில் முடிந்தன.தற்போது வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் நேரடியாக ஒருவரையொருவர் விமர்சித்து வருகின்றனர்.இதனால் இரு நாடுகளுக்கிடையே போர் ஏற்படுமோ என்ற அச்சத்தில் உலகநாடுகள் உள்ளன.இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன், கொரிய தீபகற்பத்தில் நிலவி வரும் பரபரப்பான சூழ்நிலை குறித்து வடகொரிய ஜனாதிபதியுடன் அணு ஆயுதச் சோதனைகளின் திட்டங்களைக் கைவிடுவது குறித்து, நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முயற்சிப்பதாகவும், ஆனால் வடகொரியாவோ இந்தப் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் காட்டவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில், ரெக்ஸ் டில்லர்சன் வடகொரியாவுடன் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணலாம் என்று எடுக்கும் முயற்சியின் மூலம் நேரத்தைத்தான் வீணாக்குகிறார். உங்கள் நேரத்தைச் சேமித்துக் கொள்ளுங்கள் , என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.



# எல்லை மீறும் பாகிஸ்தான்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் பாகிஸ்தான் இராணுவம், எல்லைப் பகுதியில் உள்ள இந்திய இராணுவம் மற்றும் குடியிருப்புகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறது. இதற்கு இந்திய இராணுவமும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில் ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் பாகிஸ்தான் படையினர் இன்று அதிகாலையில் அத்துமீறி தாக்குதல் நடத்தினர். ஷாபூர், கிர்னி, குவாஸ்பா செக்டார்களில் எல்லையோர கிராமங்கள் மற்றும் இந்திய இராணுவ நிலைகளைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், கிர்னி செக்டாரில் 9 வயதுச் சிறுவன் இஸ்ரர் அகமது உயிரிழந்தான். 5 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் படைகளுக்கு இந்திய இராணுவமும் பதிலடி கொடுத்தது. இதையடுத்து இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# மும்பையில் உயிரிழுந்தவர்கள் 23 ஆக உயர்வு

மும்பையில், ரயில் நிலையத்தின் பாலத்தில் ஏற்பட்ட சனநெருக்கடி காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 23ஆக உயர்ந்துள்ளது. 50க்கும் மேற்பட்டோர், நெருக்கடிக்குள் சிக்குண்டு காயமடைந்துள்ளனர்.மும்பை எல்பின்ஸ்டோன் சாலை மேம்பாலத்தில், ரயில் நிலையம் செல்லும் மக்கள், மழைக்காக ஒதுங்கியுள்ளனர். நேற்று முன்தினம் மும்பையில் கனமழை பெய்த காரணத்தால், ரயில் நிலையத்துக்குச் செல்ல இருந்த மக்கள், கூட்டமாக அங்கு ஒதுங்கியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட சன நெருக்கடி காரணமாக, அதனுள் சிக்குண்டு, 23 பேர் உயிரிழந்தனர். இந்தச் சன நெருக்கடி ரயில் நிலையத்தில் மின்கசிவு ஏற்பட்டுவிட்டது, இவ்வளவு எடையை, இந்த மேம்பாலம் தாங்காது, சிறிதுநேரத்தில் இடிந்து விழுந்து விடும் என்று பரவிய இரண்டு வதந்திகளே காரணமாக இருக்கலாம் என்று, முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வதந்தியை அடுத்தே, அங்கிருந்த மக்கள், ஒருவரை ஒருவரை முண்டியடித்துக் கொண்டு ஓடிய தாகவும், இதனால் அதிர்ச்சியடைந்த பெண்கள், அங்கேயே நின்றதாகவும், ஆண்கள், ஒருவரின் மேல் ஒருவர் தாவி ஏறியதால், பெண்கள் மூச்சுத்திணறலுக்கு உள்ளாகினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ,உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்குக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இவர்களது குடும்பத்துக்கு முதலமைச்சர் தேவேந்திர பட்நவீஸ் தலா ரூ. 5 லட்சம் வரை நிதி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.



# ரயில் நிலையத்தில் கத்திக் குத்து 2 பேர் சாவு!



பிரான்ஸின் மார்சைல் நகரில் அமைந்துள்ள முக்கிய ரயில் நிலையத்தில் மர்ம நபர் கத்தியால் தாக்கிரகளையில் ஈடுபட்டதில் பொதுமக்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மார்சைலநகரில் அமைந்துள்ள முக்கிய ரயில் நிலையத்தில் குறித்த அசம்பாவித சம்பவம் நடந்துள்ளது. பொதுமக்களிடையே திடீரென்று புகுந்த மர்ம நபர் ஒருவர் கத்தியை வீசி அட்டகாசம் செய்துள்ளார். தொடர்ந்து அல்லாஹூ அக்பர் எனக் கத்தியபடியே தாக்குதலில் ஈடுபெட்டுள்ளார். இதில் படுகாயமடைந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தரப்புத் தெரிவித்துள்ளது. தற்போது குறித்த பகுதியில் பொதுமக்கள் எவரும் செல்ல வேண்டாம் எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.குறித்த சம்பவம் தொடர்பில் தகவலறிந்து விரைந்து வந்த இராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபட்ட நபரை சுட்டுக் கொன்றுள்ளனர்.பிரான்ஸில் கடந்த 2015 ஆண்டு நவம்பரில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டதை அடுத்து அவசர நிலை பிரகடப்படுத்தப்பட்டது.அதன் பின்னரும் பலமுறை பிரான்சில் பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# காந்தியின் 148ஆவது பிறந்தநாள்



தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 148ஆவது பிறந்தநாள் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டித் தலைநகர் டெல்லியில் உள்ள அவரது நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி மற்றும் பல்வேறு தலைவர்கள் மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் அங்கு அமர்ந்து சிறிது நேரம் பிரார்த்தனை செய்தனர். காந்தி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்திய பிரதமர் மோடி, 'பாபுவுக்கு தலைவணங்குகிறேன்' என்று டுவிட் செய்துள்ளார். மேலும், அவரது உன்னதமான சிந்தனைகள் உலகம் முழுவதிலும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு உந்துதலாக உள்ளது என்றும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# பாலியல் தொல்லை



ஆஸ்திரியாவில் தொழில்நுட்பக் கண்காட்சியில் காட்சிக்காக வைக்கப்பட்ட பெண் ரோபோவுக்குப் பார்வையாளர்கள் அளித்த தொடர் பாலியல் துன்புறுத்தலால் மோசமாகப் பாதிக்கப்பட்டுப் பழுதடைந்துள்ளது. ஆஸ்திரியாவின் லின்ஸ் நகரில் நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சியிலேயே குறித்த சம்பவம் நடந்துள்ளது.ஸ்பெயினின் பார்சிலோனாவைச் சேர்ந்த ரோபோ வடிவமைப்பாளர் செர்ஜியோ சாண்டோஸ் அண்மையில் 'சமந்தா' என்ற செயற்கை நுண்ணறிவைக் கொண்ட பெண் ரோபோ ஒன்றை உருவாக்கினார்.3000 பவுண்டுகள் மதிப்புடைய குறித்த ரோபோ லின்ஸ் நகரில் நடந்த ஆர்ட்ஸ் எலக்ட்ரோனிகா விழாவில், காட்சிக்கு வைக்கப்பட்டது. அந்தக் கண்காட்சிக்கு வந்த ஆண்கள் ரோபோவைச் சீண்டியதில் அதன் இரண்டு விரல்கள் உடைந்துவிட்டன.செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இந்த ரோபோ, நாம் பேசினால் பதிலளிக்கும். நாம் அதன் மார்பை, இடுப்பை தொட்டால் பெண்கள் போன்று ஒலி எழுப்பும்.இதனால் , மக்களுக்கு இதன் தொழில்நுட்பம் புரியவில்லை. அவர்கள் மோசமாகக் காட்டு மிராண்டிகள் போல இந்த ரோபோவிடம் நடந்துள்ளனர். புதிய பாலியல் ரோபோக்கள் பாலியல் தொழிலுக்கு மாற்றாக வருங்காலத்தில் இருக்கும் என்று சில ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.இந்த ரோபோக்கள் பாலியல் தேவைகளுக்காக பெண்கள் கடத்தப்படுவதை குறைக்கும் என்றும் ஆய்வாளர்கள் வாதிட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானமுருகனை வீழ்த்தி சம்பியனானது நீக்லஸ்




பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் சம்பியனானது சென். நீக்லஸ் விளையாட்டுக் கழகம்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர் நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கம் மற்றும் அரியாலை பயிற்சி உதைபந்தாட்ட மைதானங்களில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டம் நேற்று இரவு 8 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில், ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து, நாவாந்துறை சென். நீக்லஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் சென். நீக்லஸ் விளையாட்டுக்களம், 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கி சம்பியனானது. (ஐ)



# ஓவியாவுடன் சேர ஆசை

'பிக்பாஸ்' நிகழ்ச்சி பலரின் வாழ்க்கையை மாற்றியுள்ளது. அதில் மிக முக்கியமானவர் ஆரவ். சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர், மொடலிங்கில் புகுந்து பின்னர் 'சைத்தான்' படத்தில் சின்னப் பாத்திரத்தில் நடித்தார்.

'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களில் மக்களுக்குப் பரீட்சயப்படாத முகமாகவிருந்த இவர் தற்போது அனைவரின் மனங்களையும் வென்று டைட்டில் வின்னராக மாறி 50 இலட்சம் ரூபாயை வென்று விட்டார்.

இதுகுறித்துக் கருத்துக்கூறிய அவர்,

"வெல்லுவேன் என்று நினைக்கவில்லை. சினேகன், கணேஷ் இருவரில் யாராவது ஒருவர்தான் வெல்வார்கள் என்றுதான் நினைத்தேன்.

"எந்த வியூகத்துடனும் விளையாடவில்லை. என்னை உலகுக்கு வெளிப்படுத்திக்கொள்ள இது நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தான் வந்தேன்.

"நல்ல கதை அமைந்தால் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கக் கூட ரெடியாக இருக்கிறேன்.

"ஓவியா என் மீது விருப்பம் வைத்துள்ளார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது ஒத்துவராது என்பதால் தவிர்த்தேன். அவரும் குழப்பமான மனநிலையில் இருந்தார்.

"ஓவியாவுடன் நடிக்கும் வாய்ப்பு வந்தால், நிச்சயம் நடிப்பேன். அதற்குத் தயாராக இருக்கிறேன். இப்போதும் நாங்கள் நல்ல நண்பர்கள் தான். இரசிகர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து நடிக்க விருப்பப்பட்டால் நான் தயார்" என்றார். (ஒ)




# முதல் வெற்றி

மலேசியாவில் நடந்த பார்முலா 1 காரோட்டப் போட்டியில் நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் முதலிடம் பிடித்தார்.

இந்த ஆண்டுக்கான பார்முலா 1 காரோட்டப் போட்டி உலகம் முழுவதும் 20 சுற்றுகளாக நடந்து வருகிறது.

இதன் 15ஆவது சுற்றான மலேசிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டி கோலாலம்பூரில் உள்ள செபாங் ஓடுதளத்தில் நேற்று நடந்தது.

பந்தய தூரமான 310.408 கிலோ மீற்றர் இலக்கை நோக்கி 10 அணிகளைச் சேர்ந்த 19 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில், நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) ஒரு மணி 30 நிமிடங்கள் 01.290 விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். மேலும் அதற்கான 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார். இந்தப் பருவகாலத்தில் அவர் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். நேற்று அவரது 20ஆவது பிறந்த நாளாகும்.

இங்கிலாந்தின் லூவிஸ் ஹமில்டன் 2ஆவது இடத்தையும், ஆஸ்திரேலியாவின் டேனியல் ரிக்கார்டோ 3ஆவது இடத்தையும், ஜேர்மனியின் செபஸ்டியன் வெட்டல் 4ஆவது இடத்தையும் பிடித்தனர்.

இதுவரை நடந்துள்ள 15 சுற்றுகள் முடிவில் சாம்பியன்ஷிப் பட்டத்துக்கான வாய்ப்பில் ஹமில்டன் 281 புள்ளிகளுடன் முதலிடத்திலும், செபஸ்டியன் வெட்டல் 247 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், வால்டெரி போட்டாஸ் (பின்லாந்து) 222 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் இருக்கிறார்கள். அடுத்த சுற்றுப் போட்டி ஜப்பானில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)




# விக்ரம் மகனும் தயார்!

விக்ரமின் மகன் துருவ் விக்ரம் விரைவில் படத்தில் நடிக்கவுள்ளார் எனக் கூறப்பட்டு வந்த நிலையில், அவர் அறிமுகமாகும் படம் குறித்த அறிவிப்பை விக்ரம் நேற்று வெளியிட்டிருக்கிறார்.

தனது கடுமையான உழைப்பால் தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்திருப்பவர் நடிகர் விக்ரம்.

அவரது மகனான துருவ் விக்ரம் தற்போது அமெரிக்காவில் உள்ள பிரபல பல்கலைகழகம் ஒன்றில் படித்து வருகிறார். அவரது படிப்பை முடித்த பிறகு விரைவில் படங்களில் நடிக்கவுள்ளார் என சமீபத்தில் செய்திகள் வெளியாகி வந்தன.

அதற்கேற்றால் போல் துருவ்வும் அவரது டப்மாஷ் வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு டிரெண்டாகி வந்தார்.

இந்த நிலையில், துருவ்வின் சினிமா அறிமுகம் குறித்த அறிவிப்பை விக்ரம் அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அதில், "சமீபத்தில் தெலுங்கில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்ற 'அர்ஜூன் ரெட்டி' படத்தின் தமிழ் ரீமேக்கில் துருவ் நடிக்கவுள்ளார்" என விக்ரம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்த மற்றத் தகவல்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# காந்தியம் பேசும் கமல்



காந்தியின் வார்த்தைகள் நமக்கு வலிமையைத் தரும் எனக் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியின் 148ஆவது பிறந்தநாள் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி இந்திய அரசியல் தலைவர்கள் காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், நடிகர் கமல்ஹாசன் தனது ருவிட்டரில் கருத்தொன்றைத் தெரிவித்துள்ளார்.

"முதலில் உங்களை உதாசீனப்படுத்துவார்கள், பின்னர் உங்களைப் பார்த்து நகைப்பார்கள், பின்னர் உங்களோடு சண்டையிடுவார்கள். பின்னர் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்ற மகாத்மாவின் வார்த்தைகளை ருவிட்டரில் பதிவிட்டுள்ள கமல்ஹாசன் அந்தப் பதிவில் காந்தியின் வார்த்தைகள் நமக்குத் தேவையான வலிமையை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# அதிரடிக்குத் தயார்!



3 இருபது-20 கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலிய அணி, இந்தியாவுக்கு எதிராக 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரை இழந்துள்ள நிலையில், 3 இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்தநிலையில் இருபது-20 தொடரில் விளையாடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணியில் ஆஷிஷ் நெஹ்ரா, தினேஷ் கார்த்திக் மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்ட இந்திய அணி விவரம் வருமாறு:-

விராட் கோலி (அணித்தலைவர்), ரோஹித் சர்மா, ஷிகர் தவான், கே.எல். ராகுல், மணிஷ் பாண்டே, கேதார் ஜாதவ், தினேஷ் கார்த்திக், எம்.எஸ்.டோனி, ஹர்திக் பாண்டியா, குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சஹல், ஜஸ்பிரித் பும்ரா, புவனேஷ்வர் குமார், ஆஷிஷ் நெஹ்ரா, அக்சர் பட்டேல்.

ஆஸ்திரேலிய அணி:

ஸ்டீவ் ஸ்மித் (அணித்தலைவர்), டேவிட் வோர்னர், ஜேசன் பெக்ரெண்டார்ப், டொன் கிறிஸ்டியன், நாதன் கௌல்டர்- நீல், பேட்ரிக் கம்மின்ஸ், ஆரோன் பிஞ்ச், டிராவிஸ் கெட், மோசிஸ் ஹென்றிக்ஸ், கிளென் மெக்ஸ்வெல், டிம் பெயின், கேன் ரிச்சர்ட்சன், அடம் ஸம்பா. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் ஆஸ்திரேலியாவில் தற்கொலை

ஆஸ்திரேலியாவின் மனுஸ் தீவில் இலங்கை அகதி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. தற்கொலை முயற்சியின் பின்னர், அவர், அந்தப் பகுதி வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணித்துள்ளார். அவரது குடும்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, உயிரிழந்தவரின் பெயர், விபரங்கள் வெளியிடப் படவில்லை என, வெளிநாட்டு ஊடகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன. இதேவேளை, உயிரிழந்த இலங்கைத் தமிழர் அங்கு அகதி அந்தஸ்தைப் பெற்ற நபர் எனவும், அவர் கடந்த சில மாதங்களாக மன ரீதியாக பாதிக்கப் பட்டிருந்தார் எனவும் மனுஸ் தீவு ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் அகதிகள் கொள்கை தோல்வியடைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய கடல் தடுப்பு நடவடிக்கை காரணமாக மனுஸ் தீவில் இதுவரையில் குறைந்தது 6 பேர் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மற்றுமொரு தீவான நவ்று தீவுகளில் குறைந்தது மூன்று பேர் இதுபோன்று பலியாகியுள்ளதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன. (உ)

## வடக்குக்குப் புதிய வைத்தியசாலைகள்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கின் பல பிரதேசங்களில் புதிய வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் வசதிகளும் விரிவு படுத்தப்படவிருப்பதாகச் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு குறிப்பிட்ட அவர், "நாட்டில் சிறுவர்களின் சுகாதார நலனை மேம்படுத்துவதற்கு மேலும் மூன்று சிறுவர் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்படும்.

தாய்-சேய் வைத்தியசாலைகள் பல நாடு முழுவதிலும் அமைக்கப்பட உள்ளன. இதற்கு மேலதிகமாக இலவச சுகாதார சேவையை உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டியுள்ளது. பொது மக்களுக்குச் சௌபாக்கியமிக்க வாழ்க்கையை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்" - எனக் குறிப்பிட்டார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# மரண ஊர்வலத்தில் விபத்து இருவர் மரணம்!

குருநாகல் - தம்புள்ளை வீதியின் கிரிவவ்ல பகுதியில் மரண ஊர்வலத்தின் போது, சடலத்தை ஏற்றிச்சென்ற வாகனத்துடன் லொறி மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இதன்போது, சடலத்தை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர். இதனையடுத்து, அவர்களை, குருநாகல் வைத்திய சாலையில் சேர்த்தபோது பலியாகியுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவத்தில் பலியானவர்கள் 50 மற்றும் 63 வயதுடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒருவர் ஏற்கனவே மரணமானவரின் உறவினர் எனக் கூறப்பட்டுள்ளது. இதேவேளை, இது தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## சிறுவர் நலன்பேண் நிலையம் திறப்பு



வட மத்திய மாகாண சபையினால் பொலனறுவை தோப்பாவெவ வித்தியாலயத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் நலன் பேணல் நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் திறக்கப் பட்டது. 40 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சிறுவர் நலன்பேணல் நிலையத்தை ஜனாதிபதி நேற்று முறைபகல் திறந்துவைத்து முதலாவது பிள்ளையையும் பதிவு செய்தார். நேற்றுக் கொண்டாடப்பட்ட உலக சிறுவர் தினத்துடன் இணைந்ததாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் வட மத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரட்ன, மாகாண அமைச்சர் சம்பத் ஸ்ரீ நிலந்த ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)

## மாடு கடத்திய இருவர் கைது; 5 மாடுகள் மீட்பு


சட்டவிரோதமான முறையில் வவுண தீவிலிருந்து காத்தான்குடிக்கு அனுமதிப் பத்திரமின்றி மாடுகளைக் கடத்திய இருவரை மட்டக்களப்பு மாவட்ட ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவரவின் பணிப்பின் பேரில் ஊழல் மோசடி ஒழிப்புப் பிரிவு மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ரணதுங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் கொக்கட்டிச்சோலை சந்தியில் வைத்து இவர்களை நேற்று கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட டிமோ பட்டா லொறியிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி கடத்திவரப்பட்ட 5 மாடுகள் கைப்பற்றப்பட்டன. (உ)

## பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 33ஆவது வருடாந்த விளையாட்டு விழா பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. கொழும்பு றோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் ஆரம்பமாகவுள்ள இந்த விளையாட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இறுதி நாள் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த விளையாட்டு விழாவில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட சகல மாகாண பாடசாலைகளில் இருந்து 39 ஆயிரத்து 700 மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். (உ)

## சுற்றாடலை மக்கள் மதிப்பதேயில்லை



சுற்றாடலுக்கு மக்கள் தற்போது முக்கியத்துவம் வழங்காததால் பிரச்சினைகள் பல ஏற்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்துள்ளார். காலி உடுகம பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஆதி வாசிகளின் கலாசார நிகழ்ச்சியில் ஆதிவாசிகளின் தலைவர் உரையாற்றினார். உடனடியாக அறுவடையைப் பெறும்நோக்கில் விவசாயிகள் இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதாகவும் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார். சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு அரச நிறுவனங்கள் பல செயற்பட்ட போதிலும் அவற்றினால் நிறைவேற்றப்படும் சேவை போதுமானதல்ல செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதனால் நோய்கள் பலவற்றை பொதுமக்கள் எதிர்கொண்டிருப்பதாகவும் என்றும் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ மேலும் தெரிவித்தார். (உ)

## வகுப்பறைக் கட்டடம் திறப்பு விழா



மன்னார் தாராபுரம் அல் மினா மஹா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் மற்றும் சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றைக் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் திறந்து வைத்தார்.
ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்தப் பாடசாலைக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா அதிபர் சரீபுதீன் தலைமையில் நேற்று இடம் பெற்றது. இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட நிறுவனத்தின் அதிகாரி நுஹ்மான், மாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், வலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி செபஸ்டியன், கிரபைட் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அலிகான் ஷரீப், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜெஸீல் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

## நாளை நாளும் கோளும்

03.10.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 17 ஆம் நாள்


திரயோதசி பி.இ. 01.51 வரை | சதயம் மு.இ. 09.40 வரை | மரணயோகம்
இராகுகாலம் 03.02 – 04.32 | சுபநேரம் 10.32 – 12.02 | எமகண்டம் 09.02 – 10.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாமதம் | உதவி | மறதி | நட்டம் | பெருமை | முயற்சி | ஆதாயம் | நன்மை | பயம் | பரிசு | சினம் | பாராட்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1903.10.02**

யாழ்ப்பாணத்தில் Jaffna Steam Navigation Company என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான "SS Jaffna" என்ற பயணிகள் கப்பல் தனது வெள்ளோட்டத்தை ஆரம்பித்தது.

## யாழில் காந்தி ஜெயந்தி





மகாத்மா காந்தியின் 148ஆவது ஜயந்தி தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாக யாழ்.நகரில் உள்ள காந்தி சிலைக்கு இன்று காலை மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த நடிகரும் பட்டிமன்றப் பேச்சாளருமான பேராசிரியர் கலாநிதி கு.ஞானசம்பந்தன் பங்கேற்றிருந்தார். அவர் தலைமையில் இன்று பிற்பகல் வீரசிங்கம் மண்டபத்தில் அஹிம்சா தின சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. (உ)

# படுகொலை செய்த நபரை சவக்குழிக்குள் மூடினோம்

2009ஆம் ஆண்டு ஒருவரைக் காணாமலாக்கி, அவரைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக, வாதுவ பொலிஸார் தெரிவித்தனர். வாதுவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, முச்சக்கரவண்டியுடன் சந்தேக நபரை நேற்று மாலை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட விசாரணையில், காணாமல் போனவர், அவருடைய மகனால் படுகொலை செய்யப்பட்டார் என்றும், அவருடைய சடலம், மொரொன்குடுவ பொலிஸ் பிரிவில் உள்ள கந்தகடே மயானத்தில் சடலம் புதைக்கப்பட்டிருந்த சவக்குழிக்குள் போட்டு மூடப்பட்டுள்ளது என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். 45 வயதான சந்தேகநபரை, களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகவும், சடலத்தை தோண்டியெடுத்துப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக, அந்த மாயான பூமிக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

அமெரிக்க – இலங்கைக் கடற்படைகள்
# கூட்டுப் பயிற்சி



அமெரிக்க - இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி இன்று திருகோணமலைத் துறைமுகத்தில் ஆரம்பமாகியுள்ளது. கரட் -2017 எனப்படும் 'கப்பல் தயார் நிலை மற்றும் பயிற்சி ஒத்துழைப்பு 2017' என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியை இலங்கைக் கடற்படையும், அமெரிக்காவின் பசுபிக் கப்பற்படையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன. அமெரிக்க- இலங்கை கடற்படைகள் ஆண்டுதோறும் கூட்டுப் பயிற்சிகளை நடத்தவுள்ளன. அதன் முதற் கட்டமாகவே இந்தப் பயிற்சி இன்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 6ஆம் திகதி வரை இந்தக் கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறும். கடல்சார் பாதுகாப்பு முன்னுரிமைகள், படைகளுக்கிடையிலான இயங்குதன்மையை வலுப்படுத்தல், தெற்கு மற்றும் தெற்கிழக்காசிய நாடுகளின் படைகளுக்கிடையில் நிலையான கடற்படை ஒத்துழைப்பை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இந்தப் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்க அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் கொரனாடோ என்ற போர்க்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்தடைந்துள்ளது. (உ)

## அகழ்வுப் பணி ஆரம்பம்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதிகளில் நில அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. குறித்த அனுமதி இன்று வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகத்துக்கு இடமான பகுதிகள் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து அந்த பகுதிகளை அகழ்வதற்கு நீதிமன்ற அனுமதி வழங்கியுள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் கூறியுள்ளனர். மேலும், இந்த அகழ்வுப் பணிகள் இன்று பிற்பகல் ஆரம்பமாகவுள்ளதாகப் பொலிஸ் நிலையத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (உ)

வயிற்றில் மறைத்துத் தங்கம் கடத்தல்
# இந்தியாவில் இலங்கையர் கைது




இந்தியா சென்ற இலங்கையர் ஒருவர் விசாகபட்டினம் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறித்த நபர் நூதனமான முறையில் வயிற்றில் மறைத்து வைத்து தங்கம் கடத்திய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில், இருந்து சென்ற குறித்த நபர் விசாகபட்டினம் விமான நிலையத்தைச் சென்றடைந்த போது, அவரின் நடத்தையில் அந்த நாட்டு சுங்க பிரிவினர் சந்தேகம் கொண்டனர். இதனையடுத்து, அவரிடம் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. முதலில், குறித்த நபர் கொக்கெய்ன் போதைப் பொருள் கடத்தி வந்ததாகவே சந்தேகம் வெளியிடப்பட்டது. எனினும், பின்னர் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறித்த நபர் நூதனமான முறையில் வயிற்றில் மறைத்து வைத்துத் தங்கம் கடத்தி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. (உ)

# இலங்கைத் தம்பதியை நாடுகடத்த முடிவு

இலங்கைத் தம்பதியினரை ஆஸ்திரேலியா நாடு கடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவுரிமை கோரியிருந்த இலங்கையரும் அவரது குடும்பத்தினருமே இவ்வாறு நாடு கடத்தப்பட உள்ளனர். 39 வயதான எரங்க ரணசிங்க ஆராச்சிகே என்ற இலங்கையரின் குடும்பமே இவ்வாறு நாடு கடத்தப்பட உள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி இந்த இலங்கையர்கள் நாடு கடத்தப்பட உள்ளனர். குறித்த இலங்கையரின் மனைவி உடல் நிலை பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தை ஆஸ்திரேலியாவில் தங்க வைத்துக்கொள்ள பாரிய அளவில் செலவிட்ட போதிலும் உரிய பலன் கிடைக்கவில்லை என எரங்க தெரிவித்துள்ளார். (உ)

## மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த 'கிரான்' வீரர்களுக்குக் கௌரவம்



கபடிப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த கிரான் கருணா விளையாட்டுக் கழக வீர வீராங்கனைகளை வரவேற்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. 29ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட ஆண்கள் அணி தங்கப்பதக்கத்தினையும், பெண்கள் அணியினர் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றனர். மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ள இந்த வீரர்கள் கிரான் கிராமத்தின் கருணா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இன்று மாலை ஆரம்பமாகவுள்ள 2017ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வினில் கலந்து கொள்வதற்காகக் கிரான் மத்திய கல்லூரி சார்பாக 19வயது ஆண்கள் 17வயது ஆண்கள் மற்றும் 17 வயதுப் பெண்கள் அணியினர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சுயலாப...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களமிறங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

"எதிர்வரும் ஜனவரியில் நாடெங்கும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

"காலத்தின் தேவை கருதி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டாகப் போட்டியிட்டாலும் அல்லது தனித்து எங்கள் சின்னத்தில் போட்டியிட்டாலும் எங்கள் தனித்துவம் எப்போதும் தலை நிமிர்ந்து நிற்கும்"

"இந்த அரசாங்கம், பல கட்சிகள் அடங்கிய அரசாங்கமாகும். தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு, பின் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. ஆகவே, எல்லாச் சாத்தியங்களையும் நாம் ஆராய்கிறோம். இந்த நாட்டில் தமிழ் மக்களை நோக்கி துன்பங்கள், சவால்கள், பயமுறுத்தல்கள் வரும்போது அவற்றை நாமே அரசாங்கத்தில் இருந்தபடி எதிர்கொள்கிறோம்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

**வாக்குமூலமளிப்ப...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்கு விசாரணைக்கு, இன்று 2 ஆம் திகதி திங்கட்கிழமை, வருகை தருமாறு, 21.09.2017 திகதியிடப்பட்ட கடிதம் 27.09.2017 அன்று எனக்கு கிடைக்கப் பெற்றது. "நீண்ட தூரம் பயணம் செய்யக்கூடிய அளவில், தற்போது எனது உடல் நிலை சீரின்மையால் குறித்த திகதியில் வருகை தர முடியவில்லை என்பதை தங்களுக்கு அறியத்தருவதுடன் அவசரமாக எனது வாக்கு மூலம் தேவையெனில், மன்னார் பொலிஸ் நிலையமூடாக ஏற்பாடு செய்தால் வழங்குவேன்" என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"நான் அறம் சார்ந்த வெளிப்படைத்தன்மையுள்ள சமூக செயற்பாட்டாளன் என்பதால, தங்கள் அழைப்பைக் கண்டு அச்சப்பட்டுக் கொள்ளவில்லை என்பதையும் தங் ... என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 02.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.